## FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8073082
C 20/2018

1. District : விழுப்புரம் மாவட்டம் | PS: ல.ஒ.த காவல்நிலையம் | Year: 2018 ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் | Date: 12.12.2018 நாள்

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: PC Act 1988 as amended | Sections பிரிவுகள்: 7 of PC Act
(iii) Act சட்டம்: by PC Act 2018 (Amendment) | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.12.18 | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு 24.00 Hrs | Time from : நேரம் முதல் 15.00 Hrs | Time to : நேரம் வரை 20.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.18 | Time : நேரம் 21.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.12.18 | Time : நேரம் 21.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி நடவடிக்கை மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 200 மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விழுப்புரம் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ. அமுதா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி
தலைமை ஆய்வக அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. கி. நக்கீரன், வயது 52/18 S/o. கிருஷ்ணமூர்த்தி,
AE TNPCB, விழுப்புரம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று12.12.2018 ந்தேதி மாலை 21.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திருமதி.அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர்.பெறுநர்,காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்:அ/605/2018, நாள்:12.12.2018 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - விழுப்புரம் மாவட்ட சுற்றுசூழல் மற்றும் மாசு கட்டுப்பாடு அலுவலகம் - 12.12.2018 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்:12.12.2018. இன்று 12.12.2018ம் தேதி மாலை 15.00 மணிக்கு கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரியும் அ.அமுதா ஆகிய நான் எனது அலுவலகமான விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வாளகத்தில் அமைந்ததிருக்கும் விழுப்புரம் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ் நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் உள்ள உதவி பொறியாளர் அறையில் M-Sand தொழிற்சாலை நிறுவுதல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு அனுமதி கேட்டு வரும் விண்ணப்பதாரர்களிடமிருந்து இன்று 12.12.2018 மதியம் 14.00 மணி முதல் லஞ்சமாக பணம் பெறுவதாக எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி உடனடியாக நான் புறப்பட்டு விழுப்புரம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கிருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் அவர்களிடம் எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்படி சுற்றுசூழல்

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12.12.18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12/12/18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12/12/18 21.45

Name: பெயர் ........ M. Sathish
Rank: நிலை ........ Inspector ........ No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மாக கட்டுப்பாடு வாரியம் விழுப்புரம் மாவட்ட அலுவலகத்தை திடீராய்வு செய்வது தொடர்பாக ஆலோசானை செய்தேன். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் அவர்கள் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்து காவல் குழுவினருக்கு தக்கஅறிவுரைகள் வழங்கினார். பின்னர், நான், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அரசு வாகனத்தில் 16.30 மணிக்கு புறப்பட்டு 16.45 மணியளவில் விழுப்புரம் பெருந்திட்ட வளாகத்தில் அமைந்திருக்கும் விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலக பின்புறத்தில் அமைந்துள்ள தெற்கு பார்த்த வாயில் கொண்ட விழுப்புரம் மாவட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தினுள் நானும், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் குழுவினர் உள்ளே சென்றோம். மேற்படி அலுவலகத்தின் நுழைவாயில் அருகே இடதுபுறம் கிழக்கு பார்த்த வாசல் கொண்ட அறையான உதவி பொறியாளர் அறையில் உள்ளே நானும், விழுப்புரம் ஊ.த.க பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது குழுவினருடன் சென்றோம். அந்த அறையில் வடக்கு பார்த்த இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் என்னையும் என்னுடன் வந்திருந்த அனைத்து குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் மேற்படி நபரை நான் விசாரித்தபோது அவர் தனது பெயர் கி.நக்கீரன் வயது 52 தந்தை பெயர் சி.கிருஷ்ணமூர்த்தி உதவி பொறியாளர் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அலுவலகம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழுப்புரம் என அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் அவரது அலுவகத்தை திடீராய்வு செய்யப்போவதாக சொன்னதன் அடிப்படையில் மேற்படி நக்கீரன் உதவி பொறியாளர் அவர்கள் முன்னிலையிலேயே அந்த அறையை துணை கண்காணிப்பாளர் உதவியுடன் ஆய்வு செய்ய தொடங்கினேன். மேற்படி உதவி பொறியாளர் நக்கீரன் அமர்ந்திருந்த கணனியுடன் இணைந்திருந்த மேசையினை ஆய்வு செய்தேன் மேற்படி மேசையின் வலதுபுறத்தில் இருந்த சிறிய டிராயரினை திறந்து பார்த்தபோது அதில் கைப்பற்றக்கூடிய பொருட்களோ ஆவணங்களோ எதுவும் இல்லை. பின்னர் மேற்படி டிராயரின் கீழே இருந்த மூடு கதவு கொண்ட சிறிய அறையினை ஆய்வு செய்த போது அதில் இருந்த நீல நிற Hand Bag-னை திறந்த பார்த்தேன் அதில் இரண்டாயிரம் ரூபாய் ஒரு கட்டும், ஐநூறு ரூபாய் ஒரு கட்டும் இருந்தது. முதலில் மேற்படி இரண்டாயிரம் ரூபாய் கட்டினை உதவி பொறியாளர் நக்கீரன் முன்னிலையில் நான் எண்ணிப்பார்த்தபோது அதில் 2000X50 =1,00,000 இருந்தது. பின்னர் மற்றொரு ஐநூறு ரூபாய் கட்டினை எண்ணிப்பார்த்தபோது அதில் 500 X100 = 50,000 ஆக மொத்தம் ரூ.1,50,000 இருந்தது. மேலும், அதே மேஜை சிறிய அறையில் மற்ற ஆவணங்களை சோதனை செய்தபோது அதில் இருந்த அரசு பொருட்காட்சி-2018 மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் கடலூர் என்ற பெயர் கொண்ட சந்தன நிறம் கொண்ட துணிப்பையினை பிரித்து ஆய்வு செய்தபோது அதில் இரண்டாயிரம் ரூபாய் இரண்டு கட்டுகள் மற்றும் நக்கீரன் அவர்களின் அடையாள அட்டை ஆகியவை இருந்தது. மேற்படி இரண்டு இரண்டாயிரம் ரூபாய் கட்டினை உதவி பொறியாளர் நக்கீரன் முன்னிலையில் எண்ணிப்பார்த்தபோது முதல் கட்டில் 2000X50 =1,00,000மும், மற்றொரு இரண்டாயிரம் ரூபாய் கட்டினை எண்ணிப்பார்த்தபோது முதல் கட்டில் 2000X50 =1,00,000மும் ஆக மொத்தம் ரூ.2,00,000/- இருந்தது. பின்னர் அதே பையில் இருந்த ஒரு காக்கி நிற கவரினை பிரித்து ஆய்வு செய்தபோது அதில் ஒரு 500 (1X500) மற்றும் மூன்று 300 (3X100) ஆக மொத்தம் ரூ.800/- இருந்தது. பின்னர் அவரது மேசையின் இடது புறத்தில் திருமதி.D.தனலட்சுமி, (ஸ்ரீ தண்டுமாரியம்மன் M.Sand Unit) A.சண்முகம் (ஸ்ரீ பெரியாண்டவர் புளூ மெட்டல்ஸ்) மற்றும் C.பிரபாகர் (ஸ்ரீ M.Sand) ஆகிய பெயர்கள் கொண்ட மூன்று கோப்புகள் இருந்தது அது குறித்து அவரிடம் கேட்க அவர் மேற்படி கோப்புகளும் M-Sand தொழிற்சாலை நிறுவ அனுமதி கேட்டு வந்த கோப்புகள் என்றும் அதனை இன்று அவர் பரிசீலனை செய்ததாக கூறினார். மேற்படி மூன்று கோப்புகளின் படிவம் 1 மற்றும் 2 ஐ மேல் விசாரணைக்காக கைப்பற்றி கொண்டேன். அந்த கோப்பில் நானும், உதவி பொறியாளர் நக்கீரனும் கையொப்பம் செய்தோம். பின்னர் மேற்படி அறையில் இதர எவ்வித கைப்பற்றக்கூடிய பொருட்களும் காணப்படவில்லை. ஆனால் மேற்படி அறையில் திரு.நக்கீரன் உதவி பொறியாளர் முன்னிலையில் அவரது மேசையில் இருந்து கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ. 3,50,800 கைப்பற்றப்பட்டது மேற்படி உதவி பொறியாளர் நக்கீரன் மேசையில் இருந்து

17/4/18

அவரது முன்னிலையில் கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூபாய் 3,50,800/- பற்றி திரு.நக்கீரன்
அவர்களிடம் விசாரணை செய்தபோது இந்த தொகை M-Sand தொழிற்சாலை நிறுவ மற்றும் புதுபிக்க
அனுமதி கேட்டு விண்ணப்பித்த நபர்களிடம் இருந்து இன்று பெறப்பட்ட லஞ்சத்தொகை என்றும் இந்த
தொகையினை நான் விண்ணப்பதாரர்களிடம் இருந்து பெற்று அலுவலக உயர் அதிகாரிகளுக்கு
கொடுப்பதற்கு வாங்கி வைத்ததாக கூறினார். மேலும், தனது மாத ஊதிய வங்கி கணக்கு விழுப்புரம்
கனரா வங்கியில் இருப்பதாகவும் அதனுடைய கணக்கு எண் 2697101026621 என தெரிவித்து அவரது
இருக்கையில் இருந்து மேற்படி வங்கி கணக்கின் கணக்கு புத்தகத்தை ஆஜர் செய்தார். இதனை
வாக்குமூலமாக பதிவு செய்து அதில் நான் கையொப்பம் செய்தேன் பின்பு மேற்படி வாக்குமூலத்தை
படித்துபார்த்து உதவி பொறியாளர் நக்கீரனும் கையொப்பமிட்டார். மேற்படி அறையில் கைப்பற்றப்பட்ட
தொகை ரூபாய் 3,50,800-க்கான சரியான முகாந்திரம் இல்லாததால் இந்த தொகையை நான் மேல்
விசாரரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். இந்த அலுவலக நுழைவு வாயிலின் வலது புறத்தில் மேற்கு
பார்த்த வாயில் கொண்ட மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அறை இருந்தது. அந்த அறையினுள் ஆய்வு
குழுவினரான நாங்கள் நுழைந்தபோது அங்கு யாரும் இல்லாததால் மேற்படி அறையினை உதவி
பொறியாளர் திரு.நக்கீரன் முன்னிலையில் ஆய்வு செய்யப்பட்டது. அந்த அறையில் கைப்பற்றக்கூடிய
எந்த பொருளும் இல்லை. பிறகு அலுவலகத்தின் கிழக்கு நோக்கியிருந்த கோப்பு அறையை ஆய்வு செய்ய
அந்த அறையிலும் கைப்பற்றக்கூடிய எந்த பொருளும் இல்லை. அதற்கடுத்தாற்போல் தெற்கு நோக்கி
வாயிற்கொண்ட நிர்வாக அறையில் சென்றபோது அந்த அறையில் பெண் ஒருவர் இருந்தார் அவரிடம்
என்னையும் என்னுடன் இருந்த காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் குழுவினரையும் அறிமுகம்
செய்து கொண்டு அவரை விசாரிக்க அவர் தனது பெயர் சங்கரி என்றும் பொது உதவியாளராக
பணிபுரிவதாகவும் தெரிவித்தார் பின்பு அவரது அறையை ஆய்வு செய்ய அந்த அறையில் கைப்பற்றக்கூடிய
எந்த பொருளும் இல்லை. பின்னர் அவரிடம் இந்த வருடத்திற்கான அலுவலக வருகைப்பதிவேட்டினை
கேட்டபோது அவர் எடுத்து ஆஜர் செய்தார். அதை நான் பார்வையிட்டபோது இன்று திரு.நக்கீரன்
அவர்கள் அலுவலகத்தில் ஆஜரில் இருந்ததற்கான சுருக்கொப்பம் செய்துள்ளார். பின்னர் மேற்படி
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், விழுப்புரம்
வருகைப்பதிவேடு 2018 என்ற வருகைப்பதிவேட்டினை மேல் விசாரணைக்காக கைப்பற்றி அதில் டிசம்பர்
மாத வருகைப்பதிவில் நானும், உதவி பொறியாளர் நக்கீரன் மற்றும் சங்கரி பொது உதவியாளர்
ஆகியோர்கள் கையொப்பம் செய்தோம். மேற்படி அறையின் கிழக்கில் மற்றொரு உதவி பொறியாளர்
அறை இருந்தது அந்த அறையில் யாரும் இல்லை அந்த அறையை சோதனை செய்ய அந்த அறையில்
கைப்பற்றக்கூடிய எந்த பொருளும் இல்லை. அந்த அறையின் கிழக்கில் பதிவறை இருந்தது அந்த
அறையில் இருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் சையது பாஷா என்றும் தற்காலிக களஅலுவலராக
பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் எங்களை அறிமுகம் செய்து கொண்டு அவரையும் அந்த
அறையையும் ஆய்வு செய்ததில் கைப்பற்றக்கூடிய எந்த பொருளும் இல்லை. பின்பு அலுவலகத்தின் முதல்
தளத்தை சோதனை செய்தோம் அங்கு மூனறு நபர்கள் இருந்தனர் அவர்களிடம் எங்களை
அறிமுகப்படுத்திக்கொண்டு அவர்களை பற்றி விசாரணை செய்ததில் அவர்கள் தனித்தனியாக தங்களை
அறிமுகம் செய்து கொண்டார்கள் அதன்படி 1.K.குமரவேல் த/பெ கலியபெருமாள், செக்யூரிட்டி (PVT)
2.கார்த்தி த/பெ கலியபெருமாள், அலுவலக உதவியாளர் 3.கணேஷ் த/பெ அய்யாக்கண்ணு, டேட்டா
என்ட்ரி ஆப்ரேட்டர், அனைவரும் தற்காலிக பணியாளர்களாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார்கள்
அவர்களையும் முதல் தளத்தையும் ஆய்வு செய்ததில் எந்தவித கைப்பற்றக்கூடிய பொருளும்
இல்லை.மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில்
தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக நான் கொடுத்த புகாரின் பேரில் உதவி பொறியாளர்
திரு.நக்கீரன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.தங்கள்
உண்மையுள்ள, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். இணைப்பு:
1.திடீர் ஆய்வு மகஜர்2.ரொக்கம் ரூபாய் 3,50,800/- மற்றும் இதர ஆவணங்கள் 3.திரு.நக்கீரன் அவர்களின்
வாக்குமூலம், அய்யா, நான் இன்று 12.12.2018 மாலை 21.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று
விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.20/2018 u/s 7 P.C. Act 1988 as Amended by Prevention of

Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

(M.சதீஷ்) 7/1/23
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.